# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் VI)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B)

1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு உருவாக்கத்திலும் 1972ஆம் ஆண்டயதைப்போன்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரின் பங்களிப்பின்றி அதை அரசும் எதிர்பார்க்காது ஒற்றையாட்சியிலிருந்து விலகாமலும் அதிகாரப் பகிர்வைச் சிந்திக்காமலும் வேறும் தமிழர் முன்னணியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாமலும் தனித்த சிங்களப்பிரதிநிதிப் பெரும்பான்மையைக் கொண்டு தன்னிச்சையாகச் செயற்பட்டு அரசியலமைப்பை உருவாக்கினார்கள். 5/6 பெரும்பான்மையால் அவர்கள் எதையும் செய்யக்கூடியதாக அமைந்திருந்தது. திறந்த பொருளாதாரக் கொள்கையை கைக்கொண்டு சர்வதேச நிதிக்கட்டமைப்பினுள் நுளையும் முயற்சியில் அரசு இயங்கியது. பல ஏற்றுமதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆடைத்தொழிற்சாலைகள் அதிகளவில் ஆரம்பமானது. பிரதமர் பிரேமதாஸாவினால் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான இந்த வேலைவாய்ப்புத் திட்டத்தினால் தைக்கப்பட்ட ஆடைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் வெற்றிகரமாக ஏற்றுமதி செய்ய முடிந்தது.

**மாவட்ட அமைச்சர்கள்**

1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் மாவட்ட அமைச்சர்கள் என்ற புதிய பதவியை அரசாங்கம் கொண்டு வந்தது. அதில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்து வடகிழக்கு அபிவிருத்திக்காகச் செயற்பட அரசாங்கம் விரும்பியது. பாராளுமன்ற உறுப்பினர்களை மாவட்ட அமைச்சர்களாக்கி அம்மாவட்ட அபிவிருத்திற்கு பொறுப்பாக்கும் யோசனையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பங்கேற்க மறுத்துவிட்டது. அதனால் சிங்கள உறுப்பினர்களே வடக்கு கிழக்கிற்கும் மாவட்ட அமைச்சர்களாயினர். யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராக யூ.பி. விஜயகோன்: மட்டக்களப்புக்கு ரங்கநாயகி பத்மநாதன் என ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களே நியமிக்கப்பட்டார்கள். அதனால் வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சிக்கான அதிகாரப் பகிர்வை எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு அரசியலமைப்பில் எதுவும் கொடுத்திராததால் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கு ஜே.ஆர். ஜெயவர்தனா ஒரு திட்டத்தை ஆராய்ந்தார். அது 1965ல் டட்லி சேனநாயக்கா அரசில் பேசப்பட்ட மாவட்ட சபைகள் என்ற அதிகாரத்தைப் பரவலாக்கும் யோசனையாகும்.

**மாவட்ட சபை - யானைப்பசிக்கு சோளப்பொரி**

1979ம் ஆண்டு ஆவணி மாதம் மாவட்ட சபைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிட ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். ஓய்வுபெற்ற நீதியரசர் விக்டர் தென்னக்கோன் தலைமையில் அமைந்த அந்த ஆணைக்குழுவில் ஏ.ஜே. வில்சன்: நீலன் திருச்செல்வம் உட்பட வேறு சிலரும் இருந்தார்கள். அதன் பயனாக 1980ம் ஆண்டு 35ம் இலக்க மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது நாடு முழுவதுமாக அன்றிருந்த 24 மாவட்டங்களுக்கும் மாவட்ட சபைகள் உருவாக வழிவகுத்தது. அதற்கான தேர்தல் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 4ந் திகதியன்று நடைபெற்று 1981 ஜூலையில் மாவட்ட அபிவிருத்தி சபைகள் இயங்கத் தொடங்கின.

ஆனால் இந்தத் தீர்வுக்கு கூடிய பாங்கான தமிழ் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன்

அதனின்றும் விலகினார் அல்லது விலக்கப்பட்டார். தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசன் டாக்டர். தருமலிங்கம் ஈழவேந்தன் ஆகியோர் கட்சியினின்றும் விலகி தமிழ் ஈழ விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினர்.

**நூலக எரிப்பு அடாவடித்தனம்**

தேர்தலுக்கு திகதியை அறிவித்துவிட்டு அரசாங்கக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தை கைப்பற்றும் செயலிலும் இறங்கியது. அதற்கு முன்னாள் பா.உ. அ. தியாகராஜாவை தலைமை வேட்பாளராக அறிவித்தார்கள். தமிழர் சார்பில் புறொக்டர் பொட்டர் நடராஜா களத்தில் இறக்கப்பட்டார். தேர்தல் பிரச்சாரக் காலத்திலேயே 24.05.1981 அன்று துவிச்சக்கர வண்டியில் வந்த ஒருவரால் வேட்பாளர் தியாகராஜா சுடப்பட்டு இறந்தார். இந்த நிலைமையால் வெறுப்படைந்த அரசாங்க கட்சி தேர்தலை குழப்பும் கைங்கரியத்தில் இறங்கியது. தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன் அதாவது 1981 ஜூன் 1ந் திகதி இரவு கொழும்பிலிருந்து வந்த சில வன்முறைக் கும்பல்களால் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. அதில் சில பொலிசாரும் தீவிரமாக பங்குபற்றியிருந்தார்கள். அன்று அமைச்சராயிருந்த காமினி திஸநாயக்கா இந்த சம்பவத்திற்கு முக்கிய பாத்திரம் வகித்தவரென அடையாளம் காணப்பட்டார்.

யாழ் நூலகம் எரிக்கப்படும்போது 97,000 அரிய புத்தகங்களுடன் பல கையெழுத்துப் பிரதிகளும் நூறாண்டுகளுக்கு மேற்பட்ட மிகப் பழமை வாய்ந்த ஓலைச் சுவடிகளும் அங்கு இருந்ததாக கணிக்கப்பட்டுள்ளது. யாழ் நூலகம் தென்கிழக்காசியாவிலே மிகப் பெரிய ஒரு நூலகமாகத் திகழ்ந்திருந்தது.

தேர்தல் தினமான ஜூன் 4ந் திகதி மேலும் பல துரதிஸ்ட சம்பவங்கள் நடந்தேறின. விடியும் பொழுதில் மாவட்டத்தில் வெவ்வேறு பகுதித் தெருக்களில் ஆங்காங்கு இறந்த உடல்கள் காணப்பட்டன. அதிகாலையில் ஏதாவது தொழில் நிமித்தம் தெருவில் சென்றவர்களின் நிலைமையே சுடப்பட்டு இறந்திருந்த காட்சி. இது மக்களை வாக்களிக்க விடாது பயத்தைக் காட்டி தடுக்கும் ஒரு செயற்பாடாகவிருக்கலாம். இன்னுமொரு பாரிய மோசடிச் சம்பவமும் அரங்கேறியது. காலையில் பிற மாவட்டங்களிலிருந்து தேர்தல் வேலைக்கு ஊழியர்களாக வந்தவர்களில் அனேகமானோர் சிங்களச் சிற்றூழியர்களாக இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களாக இருந்த அவர்கள் கள்ள வாக்குச்சீட்டு போடும் மோசடிகளில் சுதந்திரமாக ஈடுபட்டிருந்தார்கள். பல வாக்குச் சீட்டுப்போடப்பட்ட பெட்டிகள் மாயமாக காணாமல் போயிருந்தன. அவ்வாறிருந்தும் தேர்தல் முறையாக நேர்மையாக நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. இருந்தும் அத்தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி யாழ்ப்பாணத்தில் 263369 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களை வென்றது. புறொக்டர் நடராஜா மாவட்ட அபிவிருத்திச் சபையின் தலைவரானார். ஐக்கிய தேசியக் கட்சி 23302 வாக்குகளையும் தமிழ் காங்கிரஸ் 21682 வாக்குகளையும் பெற்றிருந்தது.

**இயக்கங்களின் முன்னேற்றம்**

1965ல் ஆரம்பித்த சே குவாரா இயக்கம் வலிமைபெற்று அரசை எதிர்த்து தாக்குதலை 1970ல் ஆரம்பித்த போது எவ்வாறு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்ததோ அதே போன்றே 1975ல் ஸ்ரீமாவின் ஆட்சிக்கெதிராக ஆரம்பித்த விடுதலைப் புலிகள் இயக்கமும் வலிமைபெற்று கொரில்லாப் பாணியில் முழு வீச்சில் தாக்குதலை 1980களில் ஆரம்பித்த போது அரசாங்கம் மாற்றமடைந்து (1977) ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்தது.

அல்பிறட் துரையப்பாவின் கொலையுடன் ஆரம்பித்த ‘களையெடுப்பு’ என்ற வேட்டை அரசாங்கத்தை ஆதரிப்பவர்களை அழித்தலிலும் அத்தோடு புலனாய்வில் ஈடுபட்டிருந்த பொலிசார்களையும் குறிவைக்கப்பட்டிருந்து. தமிழாராய்ச்சி மகாநாட்டைக் குழப்பிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரா அவர் அன்று செய்த பணிக்காக பதவி உயர்வு பெற்று உதவி சுப்பிரின்டனாக இருந்தபோது சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பல தமிழ் இளைஞர் யுவதிகளை சொல்லமுடியாத வகையில் சித்திரைவதைகளுக்கு

உள்ளாக்கி இயக்கங்களின் ஆரம்ப காலத்தில் வெறுப்பைச் சம்பாதித்திருந்தார். அதன்பின்னர் பொது மக்களுடன் சுலபமாக உரையாடி இயக்கங்களை அழிப்பதற்கு ஏதுவாக பதவி உயர்வுகளைக் காட்டி தமிழ் போலிஸ் அதிகாரிகளை அரசு புலனாய்வு வேலைகளுக்கு நியமித்தது. பொலிஸ் பரிசோதகர் குருசாமி பத்மநாதன் பின் பஸ்தியாம்பிள்ளை என பல பேர்கள் இயக்கத் தலைமைகளை அழிக்க நியமிக்கப்பட்டு அவர்களே மரணமடைந்ததுதான் விநோதமானது. பொலிஸ் பரிசோதகர் பஸ்தியாம்பிள்ளையை மடக்கி அவரையும் அவரின் குழுவினரையும் தாக்கியழித்த தந்திரமான செயற்பாடு அக்கால பத்திரிகைகளுக்கு எழுத ஒரு சுவையான தீனியாகக் கிடைத்தது. மடுக்கோயில் காட்டுக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தீவிரவாதத் தலைவர்கள் சிலர் இருப்பதாக தகவல் கிடைத்து அங்கு சென்ற பஸ்தியாம்பிள்ளை குழுவினரை சமயோசிதமாக பேசி நம்பவைத்து தேனீர் போடுவதாக பாசாங்குபண்ணி அவர்கள் அசந்திருந்த தருணத்தில் புலி உறுப்பினர் ஒருவர் பஸ்தியாம்பிள்ளையின் மேல் பாய்ந்து அவரின் சுழற்துப்பாக்கியை பறித்து மறுகணமே அவரைச் சுட்டுத்தள்ளினார். சத்தம் கேட்டு வெளியில் நின்ற ஏனைய போலிஸார் திரும்புகையில் அவர்களுக்கும் வெடி வைக்கப்பட்டு இறந்தனர்.

**கறுப்பு ஜுலை**

1983ம் ஆண்டு ஜுலை ஒரு கறுப்பு ஜுலை எனப் பெயர்பெற்றதற்கு காரணமான விடுதலைப்புலிகளின் பாரிய தாக்குதலுக்கு பதிலடியாக கொழும்பிலும் பின்னர் நாடளாவியும் குறிப்பாக மலையகத்திலும் இடம்பெற்ற இனக்கலவரங்களாகும். எவரும் நினைத்தும் பார்த்திராத தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் கொள்ளைகள் கொடுமைகள் வீடெரிப்புகள் கடை எரிப்புகள் வாகன எரிப்புகள் என்பன கொஞ்சநஞ்சமல்ல. 150,000 தமிழ்க் குடும்பங்கள் வீடு இழந்திருந்தார்கள். சரியான கணக்கு விபரம் இல்லாதிருந்தாலும் குத்துமதிப்பாக 4000 தமிழ் பொதுமக்கள் இறந்திருக்கலாம் என ஒரு தகவல் கூறுகின்றது. 8000 வீடுகளும் 5000 கடைகளும் அழிக்கப்பட்டிருந்தன. தப்பியிருந்த தமிழ் மக்கள் பொலிசாரின் உதவியுடன் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். ஜுலை 24ந் திகதி இரவு பொரளையில் ஆரம்பித்த வன்முறை செயற்பாடுகள் ஏனைய பகுதிகளுக்கும் மாகாணங்களுக்கும் பரவி ஏழு நாட்களுக்கு மேல் தொடர்ந்திருந்தது.

**கன்னிவெடி விபத்து**

இனக்கலவரம் ஆரம்பித்ததற்கு காரணம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஜுலை 23ந் திகதி இடம்பெற்ற புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலாகும். இந்தத் தாக்குதலில் ஒரே சமயத்தில் 13 இராணுவத்தினர் மரணமடைந்தது முதற்தடவையாகும். இவர்களின் உடல்கள் 24ந் திகதி மாலையில் கொழும்பு கணத்தை மயானத்தில் அரச மரியாதையுடன் அடக்கம் செய்யத் திட்டம் வகுக்கப்பட்டு இருந்தாலும் பின்னர் இறந்தவர்களின் இனபந்துக்களின் வேண்டுகோள்களுக்கு அமைய அன்றிரவே உடல்கள் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. அந்த வேளையிலேயே இரவோடு இரவாக பொரளையில் ஆரம்பித்த கடையெரிப்பு வீடெரிப்பு கொலை கொள்ளை 25ந் திகதி காலையிலிருந்து கொழும்பு முழுவதும் பரவியது. அத்துடன் மலையகம் முழுவதுமாக வன்செயல்கள் ஆரம்பமாகி ஏழு நாட்கள் வரை உயிரழிப்பு சொத்தழிப்பு தொடர்ந்தது. இந்த இனக்கலவரம் தமிழர்களின் வாழ்க்கையில் பல திருப்பங்களை உண்டாக்கியது. சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பாரிய அபகீர்த்தியை உண்டுபண்ணியது. இலங்கையிலிருந்த தமிழ் மக்கள் இன்று உலகில் பல கண்டங்களிலும் பல ஊர்களிலும் தங்களது சீவியத்தை மாற்றியமைத்ததற்கு இந்த கறுப்பு ஜுலை இனக்கலவரமே அடிப்படைக் காரணமாகியது.

(தொடரும்)